

சென்னை, கொளத்தூர் கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி புதிய கட்டட கட்டுமானப் பணிகளை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆய்வு செய்தார். உடன் மேயர் திருமதி பிரியா ராஜன், கூடுதல் ஆணையர் சி. ஹரிப்ரியா. இணை ஆணையர் சு.மோகனசுந்தரம், பெ.க.கவெனிதா. சரிதா மகேஷ்குமார் எம்.சி., துணை ஆணையர் இரா.ஹரிஹரன், நாகராஜன் எம்.சி. மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

### தமிழ்நாட்டில் 300க்கும் மேற்பட்ட

# புதிய சுற்றுலா தலங்களை சர்வதேச தரத்தில் உயர்த்த நடவடிக்கை!

## செஞ்சிக்கோட்டையை ஆய்வு செய்த பின் அமைச்சர் இரா.ராஜேந்திரன் தகவல்!



செஞ்சி, அக். 26 -
தமிழ்நாட்டில் 300க்கும் மேற்பட்ட புதிய சுற்றுலா தலங்களை சர்வதேச தரத்தில் உயர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக செஞ்சிக் கோட்டையை ஆய்வு செய்த சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டத்தில் சுற்றுலாத்தலமாக செஞ்சிக்கோட்டை திகழ்ந்து வருகிறது.

இந்நிலையில் கடந்த ஜூன் மாதத்தில்உலக பாரம்பரிய சின்னமாக செஞ்சிக்கோட்டையை யுனெஸ்கோ நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்நிலையில் சுற்று லாத் துறை அமைச்சர் ராஜேந்திரன், செஞ்சிக்கோட்டையில் இன்று நேரில் சென்று பார்வையிட்டார்.

செஞ்சிக்கோட்டையில் உள்ள கல்யாண மஹால், உடற்பயிற்சி கூடம், நெற்களஞ்சியம்,திருவண்ணாமலை சாலையில் உள்ள பி. ஏரி உள்ளிட்ட பல்வேறு இடங்களை அவர் பார்வையிட்டார்.

இதில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ., ஆரணி பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ். தரணிவேந்தன், விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரஹ்மான், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ்ச்செல்வன், மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் ஷீலா தேவி சேரன்,ஒன்றிய குழு தலைவர்கள் செஞ்சி விஜயகுமார், வல்லம் அமுதா ரவிக்குமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான்,இந்திய தொல்லியல் துறையின் கண்காணிப்பாளர் சுஷாந்த் குமார், பொறியாளர் பரணிதரன், உதவி தொல்லியல் துறை கண்காணிப்பாளர்கள் ரமேஷ், சுஜாதா,மாவட்ட சுற்றுலா துறை அலுவலர் ஜனார்த்தனன்,பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் முகமது ரிஸ்வான், பேரூராட்சிகளின் உதவி செயற் பொறியாளர் ராதாகிருஷ்ணன், பேரூராட்சி செயல் அலுவலர்கலையரசி,வட்டாட்சியர்துரைச்செல்வன் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நடராஜன், பிரபாசங்கர் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அப்போது சுற்றுலாத் துறை அமைச்சர் ராஜேந்திரன் செய்தியாளர்களிடம் கூறுகையில்:

தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி சுற்றுலாத்துறை மேம்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் சுற்றுலாத் துறைக்கு தேவையான நிதியை முதலமைச்சர் வழங்கி வருகிறார். தமிழ்நாட்டில் சுற்றுலாத் துறைக்கு என கொள்கையை உருவாக்கி 300க்கும் மேற்பட்ட புதிய சுற்றுலா தளங்களை சர்வதேச தரத்தில் உயர்த்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது .

செஞ்சி கோட்டையை யுனெஸ்கோ அமைப்பால் பாரம்பரிய சின்னமாக அறிவித்திருக்கிறது தினமும் சுற்றுலா பயணிகள் செஞ்சிக்கோட்டையை காண வருகின்றனர் மாதத்திற்கு சுமார் 18,000 பேர் வந்து செல்கின்றனர் செஞ்சி கோட்டையை சுற்றுலா தலமாக மேம்படுத்துவதற்கு ஒருங்கிணைந்த விரிவான திட்ட அறிக்கையை தயார் செய்துமுதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும். சுற்றுலா பயணிக்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்து தரப்படும் செஞ்சிக்கோட்டையில் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளையும், செஞ்சி பி. ஏரியில் படகு சவாரி செய்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும்என அவர்தெரிவித்தார்.



கழகச் சட்டத்துறை இணைச் செயலாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமன், வார்டு எண்.61, புதுப்பேட்டை, துளசிங்கம் தெருவில் மழைக் கால முன்னேற்பாடுகள் குறித்து ஆய்வு செய்து, அத்தெருவில் தேங்கி நிற்கும் மழை நீரை வெளியேற்றவும், குப்பைகளை அகற்றவும், மின்சாரப் பெட்டியைத் தரையிலிருந்து உயர்த்தி வைக்கவும் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு துறை அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார். இவ்வாய்வின்போது மாநகராட்சி, குடிநீர் வழங்கல் வாரியம் மற்றும் மின் வாரியத் துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அண்ணல் தங்கோ
### அக்டோபர் 26 (2015)



**இளம்வயதிலேயே திராவிடர் கழகத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.**

**சைதை பகுதியில் வட்டச் செயலாளர் பொறுப்பேற்று அப்பகுதியில் கழகம் வளர்த்தவர்.**

**இந்தி எதிர்ப்புப் போராட்டம், விலைவாசி எதிர்ப்புப் போராட்டம் போன்ற கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் பங்கேற்றவர்.**

**நெருக்கடி கால மிசாவில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திண்டிவனத்தில் 2000 பனை விதைகள் நடும் நிகழ்ச்சி!

திண்டிவனம், அக். 26 -
விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் நகர தி.மு.க. இளைஞரணி சார்பில் பசுமையைபாதுகாக்கும் வகையில் திண்டிவனம் அவரப்பாக்கம் ஏரியில் 2000 பண விதைகள் மற்றும் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது.

திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன் தலைமையில் திண்டிவனம் நகர இளைஞரணி அமைப்பாளர்,திண்டிவனம் நகர மன்ற உறுப்பினர் சதீஷ் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டுதிண்டிவனம் அவரப்பாக்கம் ஏரியில் 2000 பனை விதைகள் நடும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்து மரக்கன்றுகளை நட்டு வைத்தார்.

நிகழ்ச்சியில் திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், நகராட்சி மேலாளர் நெடுமாறன், நகர அமைப்பு அலுவலர் திலகவதி, உதவி வருவாய் அலுவலர் அசோகன்,நகர அவைத் தலைவர் ரவிச்சந்திரன், விழுப்புரம் வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் டி.கே.பி. ரமேஷ், பாபு, சந்திரன், ஆடிட்டர் பிரகாஷ்,டாக்டர் சூரிய பிரகாஷ், இலியாஸ், ஸ்டீபன் ராஜ், சஞ்சய், ராஜசேகர், விஜய், ஷாகித் பாஷா, அருண்குமார், லோகேஷ், அப்துல் ரகுமான், ஈஸ்வரமூர்த்தி, உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# ஏமாற்றாதே! ஏமாற்றாதே!

அமெரிக்க அதிபராக டிரம்ப் பதவியேற்ற நாளி லிருந்து பல்வேறு சர்ச்சைக்குரிய கருத்துக்களைக் கூறி வருகிறார். இதுவரை கிட்டத்தட்ட ஐம்பது முறைகளுக்கு மேல் எட்டு போர்களை தான்தான் நிறுத்தினேன் என்று தம்பட்டம் அடித்துப் பேசியுள்ளார். அதிலும் குறிப்பாக இந்தியா - பாகிஸ்தான் போரை தானே நிறுத்தியதாக டிரம்ப் கூறியுள்ளார்.

ஆனால் இந்திய பிரதமர் நரேந்திர மோடியோ பாராளுமன்றத்தில் கழக எம்.பிக்கள் டிரம்ப் கூறியது உண்மையா என்று எழுப்பிய அடுத்தடுத்த கேள்விகளுக்கு நேரடியான பதில் இல்லை டிரம்ப் கூறுவது அப்பட்டமான பொய் என்று அழுத்தமாக பதிலளிக்கவில்லை. அழுத்தத்திற்குப் பதிலாக மழுப்பலான பதிலைத் தான் தந்தார்.

பிறகு ஒருநாள் திடீரென்று பாகிஸ்தான் கேட்டுக் கொண்டதற்கிணங்கத் தான் போர் நிறுத்தப்பட்டது என்றார். ஆக்கிரமிப்புக் காஷ்மீர் முக்கிய பிரச்சினை யாக இருக்கிறது. அப்பாவி இந்திய மக்களும், இந்திய ராணுவ வீரர்களும் இதுவரை ஆயிரக்கணக்கில் பாகிஸ்தான் ஆதரவு தீவிரவாதிகளால் கொல்லப்பட்டுள்ளனர். இரண்டு இராணுவ வீரர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு கூட கொல்லப்பட்டுள்ளனர்.

இப்படிப்பட்ட நிலையில் தீவிரவாதத் தாக்குதலுக்கு முடிவு கட்ட வேண்டும். அப்பாவி மக்கள் கொல்லப்படுவது தடுக்கப்பட வேண்டும் இதற்கு உறுதியான மற்றும் இறுதியான முடிவுவை பாகிஸ்தான் தெரிவிக்க வேண்டும் என்றும் பிரதமர் மோடி கேட்டிருக்க வேண்டும். அப்படி கேட்டு அதற்குத் தக்க பதில் கிடைத்திருந்தால் மட்டுமே ஆபரேஷன் சிந்தூர் என்ற போரை மோடி நிறுத்தியிருக்க வேண்டும். அதைவிடுத்துப் பாகிஸ்தான் கேட்டுக் கொண்டதால் போரை நிறுத்தினேன் என்று கூறுவது நம்பக் கூடிய செய்தியாகத் தெரியவில்லை. இது ஏமாற்று வேலையில்லையா?

இது 140கோடி இந்தியர்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய பதிலாக தெரியவில்லை. இறந்த இராணுவ வீரர்கள் உயிர் அற்பமானதா? சுட்டுக் கொல்லப்பட்ட நம் தேச மக்கள் உயிருக்கு மதிப்பில்லையா? இது பா.ஜ.க. மைனாரிட்டி அரசின் பித்தலாட்டத்தில் ஒன்றாகும்.

பா.ஜ.க. அரசையோ பிரதமர் மோடியையோ யாராவது குற்றம் சுமத்திப் பேசினால் அவர்கள் கடுமையான பாதிப்புக்கு ஆளாக்கப்படுகிறார்கள். பா.ஜ.க.வைச் சார்ந்த சத்யபால் மாலிக் என்ற கோவா, மேகாலயா, பீகார், ஒடிசா மற்றும் ஜம்மு - காஷ்மீர் ஆளுநராக இருந்தவர் 2019ல் புல்வாமா தாக்குதலில் நாற்பது இராணுவ வீரர்கள் இறந்ததற்குக் காரணம் பா.ஜ.க. அரசு தான். கேட்டுக் கொண்டபடி விமானங்கள் அனுப்பாததே முக்கிய காரணம் என்றார்.



**வி.பி.கலைராஜன்**
இலக்கிய அணிச் செயலாளர்

அதோடு பிரதமர் மோடி இதை பெரிது படுத்தாதீர்கள் என்றதாகவும், மோடி திமிர் பிடித்தவர் என்றும் விவசாயிகள் 700 பேர் இறந்ததை தடுத்திருக்கலாம் என்றபோது அவர்கள் என்ன எனக்காகவா இறந்தார்கள் என்று மோடி தன்னிடம் கேட்டதாகவும் துணிந்து கூறினார்.

உண்மையைச் சொன்ன அவரின் கதி என்ன ஆனது? சி.பி.ஐ வழக்குப் போடப்பட்டு அலைக்கழிக்கப்பட்டு அச்சுறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டவர் திடீரென ஒரு நாள் இறந்தே போய்விட்டார். இதுதான் பிரதமர் மோடியை எதிர்ப்பவர்களுக்கு ஏற்படும் என்று சத்யபால் மாலிக் சாவின் மூலம் தெரிவித்தனர்.

ஏன் இதனை தற்போது குறிப்பிட வேண்டிவந்ததென்றால் தற்போது டிரம்ப் மோடி தனது நண்பர் என்றும் அவர் தன்னிடம் இனிமேல் ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்க மாட்டேன் என்றும் கூறியதாக கூறியுள்ளார். இது நமது நாட்டுப் பொருளாதாரப் பிரச்சினை. நம் நாட்டு மக்களுக்கு எப்படி எளிதாக ஒரு பொருளை தர வேண்டும் என்பது நாட்டை ஆளும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் கடமை. அதை அமெரிக்கா தீர்மானிக்கிறது அதற்கு மோடி ஒத்துக் கொண்டார் என்று எப்படி டிரம்ப் கூறலாம்?

இதற்குப் பதில் பிரதமர் மோடிதான் உடனே தர வேண்டும். ஆனால் அவர் வாய்திறக்க மறுக்கிறார். அப்படியானால் டிரம்ப் சொல்வதை ஏற்றுக் கொள்கிறாரா? டிரம்பை எதிர்த்துப் பேச அச்சப்படுகிறாரா? அல்லது இந்திய மக்களை ஏமாற்றுகிறாரா?

வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் என்கிற நபர் டிரம்பிற்கும் பிரதமர் மோடிக்கும் அப்படி ஒரு தொலைபேசி உரையாடலே நடைபெறவில்லை என்பதை என்னால் கூற முடியும் என்று கூறியுள்ளார். இவரைப் பதில் தரச் சொன்னது யார்? வெளியுறவுத் துறை அமைச்சராவது பதில் தந்திருக்கலாமே? அல்லது அமித்ஷாவோ, ராஜ்நாத்சிங்கோ பதில் தந்திருக்கலாமே? ஏன் யாரோ ஒருமுகம் தெரியாத செய்தித் தொடர்பாளரை பதில் தரச் சொன்னார்கள்? அவர் என்ன பிரதமரின் அல்லது இந்திய நாட்டின் செய்தி தொடர்பாளரா?

மோடி பதில் சொல்லாததை வைத்துப் பார்க்கும் போது டிரம்ப் கூறுவது உண்மையாக இருக்குமோ என்று தானே எண்ணத் தோன்றுகிறது. சத்யபால் மாலிக் கூறியது போல் பிரதமர் மோடி மோசடிக்காரரா? திமிர் பிடித்தவரா? எப்படி வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகட்டும் இது இந்திய மக்களின் மானப் பிரச்சினை ஆயிற்றே?

இது ஒரு புறமிருக்க தமிழ்நாட்டில் அவருடைய கட்சியின் தலைவர் சி.பி.ஐ விசாரணை வழங்கியதை நியாயப்படுத்துகிறார். இனிதான் உண்மையில் நீதி கிடைக்கப் போவதாக கூறுகிறார். அவர் அ.தி.மு.க.வில் அமைச்சராக இருந்தவர். அன்று அவருக்குத் தலைவியாக இருந்த அம்மையார் சி.பி.ஐ. என்ன வானத்தில் இருந்து குதித்ததா? தமிழ்நாடு காவல்துறையினரை விட சிறந்தவர்களா? என்று கேட்டதை அவர் மறந்து விட்டாரா? இல்லை அப்படி சொல்லவில்லை என்று கூறப் போகிறாரா? மோடியா! லேடியா! என்று கேட்டதும் அம்மையார்தான் என்பதை நினைவு படுத்துகிறேன்.

தற்போது நம் கேள்வியெல்லாம் இன்று இத்தனை வினா எழுப்புகிறீர்களே பிரதமர் மோடி இந்தியாவின் ஒரு மாநிலம் மணிப்பூர் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் வன்முறை நடந்து பல குழந்தைகள், பெண்கள் கொல்லப்பட்டனர். நிர்வாணமாக இரு இளம் பெண்கள் சாலையில் நடந்து செல்ல வைக்கப்பட்டனர்.

மேலும் பல பழங்குடியினப் பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டனர். இவ்வளவு அக்கிரமங்கள் நடந்தபோது பல வெளிநாடுகளுக்குச் செல்ல முடிந்த பிரதமர் மோடி மணிப்பூர் செல்லாதது ஏன்? 893 நாட்கள் கழித்து 89 % எல்லாம் அழிந்து மக்கள் வாழவழியற்ற நேரத்தில் மோடி செல்கிறார். இதுதான் ஒரு பிரதமர் செய்யும் வேலையா? வேறு எந்த நாட்டுப் பிரதமரும் இப்படி இருக்க மாட்டார்களே? இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்? சிறுபான்மை கிறிஸ்தவர்கள் ஒழிய வேண்டும் என்பது தானே. பல தேவாலயங்கள் அங்கு இடித்து தரைமட்டமாக்கப்பட்டதை இல்லை என்பீர்களா? யாரை ஏமாற்றப் பார்க்கிறீர்கள்?

நடிகர் விஜய் 7 மணி நேரம் காலதாமதமாகச் சென்றதால்தான் 41 பேர் இறப்பதற்கு காரணமாக இருக்கிறது. இந்தச் செய்தியைக் கேட்டவுடன் என்னால் இருக்க முடியவில்லை துடித்துப் போனேன். அதனால்தான் இரவோடு இரவாக நள்ளிரவில் கரூருக்கு வந்து மக்களைப் பார்த்தேன். மக்களின் அலறலையும், அழுகையையும் கண்டு அவர்கள் உடல்களைக் கேட்டு கதறியதால் அங்கிருந்த மருத்துவர்கள் போதாதென்று மற்ற மாவட்ட மருத்துவர்கள் 152 பேரை வைத்து பிரேத பரிசோதனை செய்து கொடுக்க நேர்ந்தது என்று முதல்வர் சட்டசபையில் விளக்கம் அளித்தார்.

அதை ஏற்றுக் கொள்ளாத எடப்பாடியார் முன்னாள் முதல்வராக இருந்தவர் என்பதை மறந்து ஏன் அப்படி செய்தீர்கள் என்கிறார்? விரைந்து செய்வது தவறா? காவல்துறை தான் காரணம் என்கிறார்? உளவுத்துறை சரியில்லை என்கிறார்? உளவுத்துறை சரியாக இருந்ததால்தான் தவறாக சென்ற விஜயை பேசும் இடத்திற்கு பாலத்திலிருந்து பாதுகாப்பாக அழைத்து வந்தவர்கள் காவல்துறையினர் என்று விஜயே அன்று பேசினார். இது எடப்பாடிக்குத் தெரியுமா? 606 காவலர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர். உளவுத்துறையை எப்படி குறைகூறலாம்?

அதிகம் படிப்பவராக கூறிக் கொள்பவர் இதைப் படிக்கவில்லையா? நள்ளிரவில் வந்து நடவடிக்கை எடுத்த முதல்வரை பாராட்ட மனமில்லை. பழிபோட்டு பேசாமலாவது இருக்கலாமே!

எடப்பாடியாரே! தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டிற்குக் காரணமான நீங்களே என்றைக்கு தூத்துக்குடி சென்றீர்கள்? சட்டமன்றத்தில் யாரும் இந்த கேள்வியை கேட்கவில்லை. கேட்டிருந்தால் உங்களால் பதில் தந்திருக்க முடியாது. தூத்துக்குடிக்கு மறுநாளே சென்றீரா? மறு மாதமாவது சென்றீரா? ஒரு வருடம் கழித்து ஓ.பி.எஸ்.ஸை அனுப்பினீர்கள். அதன்பின்பு நீங்கள் பல நாட்கள் கழித்து சென்றீர்கள்? ஆனால் அப்போதும் எங்கள் முதல்வர் முதல் நபராக தூத்துக்குடி சென்றார். இதை உங்களால் மறுக்க முடியுமா? நீங்கள் தான் கரூருக்கு முதல்வர் சென்றதைப் பற்றிப் பேசுகிறீர்கள்.

இந்தியா - பாகிஸ்தான் போருக்கு இந்தியாவிற்கு ஆதரவாக ஒரு பெரிய பேரணியை நடத்திக் காட்டியவர் தமிழ்நாடு முதல்வர்தான். வேறு எந்த முதல்வரும், எந்தக் கட்சியும் நடத்தவில்லை. எடப்பாடியாரே நீங்கள் நடத்தினீர்களா? பா.ஜ.க. நடத்தியதா?

அதேபோல் கிட்டத்தட்ட நான்கு வருடங்களாக நடக்கும் பாலஸ்தீன இனப் படுகொலையை கண்டித்து ஒன்றிய அரசு இஸ்ரேலை போரை நிறுத்திட வலியுறுத்த வேண்டும் என கேட்டது யார்? தமிழ்நாட்டு முதல்வர் மட்டும் தான். ஏன் உங்களால் கேட்க முடியவில்லை. ஏனென்றால் உங்களுக்கு கேட்கத் தெரியாது? இந்தியாவில் எந்த கட்சியும் அந்த இனப் படுகொலையைப் பற்றி இதுவரை முணுமுணுக்கக் கூடயில்லை.

சிங்களர்கள் தமிழர்களைக் கொன்று குவித்த போது ஐ.நா மனித உரிமை ஆணையத்திடம் நேரில் சென்று பேசி வாதாடியது யார்? இன்றைய தமிழ்நாடு முதல்வர்தான். நீங்கள் என்ன செய்தீர்கள்? உங்கள் கட்சி என்ன செய்தது? அன்றைக்கு இன்றைய முதல்வருக்கு இருந்த உணர்வு உங்களுக்கு ஏன் இல்லை?

ஒருவர் சொல்கிறார் காசாவிற்காக முதல்வர் பேசுவது தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலுக்காகத்தானாம். காசாவுக்கும் தமிழ்நாடு தேர்தலுக்கும் என்ன சம்பந்தம்? பல்லாயிரக்கணக்கான பாலஸ்தீனர்கள் தமிழ்நாட்டில் வாழ்கிறார்களா? அவர்கள் வாக்கைப் பெறத்தான் முதல்வர் பேசினாரா? முதல்வர் எதைப் பேசினாலும் அதிலே ஏதாவது அரசியல் செய்ய செய்தி கிடைக்காதா என்று தேடிப் பார்ப்பதே சிலரின் வேலையாக உள்ளது. இதுவும் ஒரு ஏமாற்று வேலை.

சி.பி.ஐ விசாரணை நடக்கட்டும். தமிழ்நாடு ஐ.பி.எஸ் அதிகாரிகளே இல்லாத விசாரணைக் குழு விசாரிக்கட்டும். எங்களுக்கு அதைப் பற்றிக் கவலையில்லை. இன்றைக்கு வாய் கிழிய பேசி தமிழ் உணர்வாளர்களாக காட்டிக் கொள்ளும் வீராதி வீரர்கள் தமிழனாக பிறந்ததாலேயே ஐ.பி.எஸ் படித்தும் நியாயமாக இருக்க மாட்டார்கள் என்று அவர்களை புறக்கணித்து ஆணையம் அமைக்கப்பட்டதைப் பற்றி இதுவரை யாரும் கண்டிக்காதது ஏன்? உங்கள் தடந்தோள்களில் உள்ள எலும்புகள் முறிந்து விட்டதா?

எதற்கெடுத்தாலும் நடனமாடும் உங்கள் நாக்கு நரம்பறுந்து செயலற்றுப் போய்விட்டதா? உங்களின் ஓங்கிய கைகள் ஒடிந்து போய்விட்டதா? வீரர்கள் வீணர்கள் ஆகிவிட்டீர்களா? தமிழனுக்கு தகுதியில்லை என்கிற போது உங்களால் தட்டிக் கேட்க முடியவில்லையே! துணி வில்லையே! ஏமாற்றுக் காரர்களே இனியும் எகிறாதீர்கள்.

இப்போது எடப்பாடி நெல் கொள்முதல் சரியாக செய்யப் படவில்லை என்று குற்றம் சுமத்துகிறார். இதுவரை 14 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது. எப்போதும் அக்டோபர் 1ம் தேதி திறக்கப்படும் நெல் கொள்முதல் நிலையங்கள் இந்தாண்டு செப்டம்பர் 1ம் தேதியே திறக்கப்பட்டுள்ளது. மொத்தம் 1825 நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. தினம் 800 மூட்டைகள் மட்டுமே நெல் கொள்முதல் செய்யப்படுகின்றன என்று எடப்பாடி கூறுகிறார். ஆம்! அப்படி நடந்தது எடப்பாடி ஆட்சியில். தற்போது ஓரத்தநாடு தாலுக்காவில் மட்டும் தினம் 5000 நெல் மூட்டைகள் கொள்முதல் செய்யப்படுகின்றன என்று நேரில் சென்று ஆய்வு செய்தபின் துணைமுதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கூறியுள்ளார். டெல்டாவில் ஆண்டுக்கு 3,50,000 ஹெக்டேர் பரப்பளவில் நடைபெற்ற குறுவை சாகுபடி டெல்டாக்காரர் நம்முதல்வர் பொறுப்பேற்ற பிறகு இன்றைக்கு 6,13,000 ஹெக்டேர் அளவிற்கு உயர்ந்துள்ளது. இனியாவது எடப்பாடி மக்களை ஏமாற்றும் பேச்சை நிறுத்திக் கொள்வாரா?